# Tamil Nadu Pollution Control Board

## Smokeless Bhogi - 2022

## Press Release

Makar Sankranti is one of the auspicious festivals celebrated throughout India as thanks giving to the Mother Nature. In Tamil Nadu it is celebrated as Thai Pongal. Our ancestors traditionally celebrated Bhogi festival just before Pongal festival based on hope by discarding negative thoughts and cheering the positive thoughts so as to celebrate the Pongal festival. They have celebrated Bhogi festival by burning old materials and goods made up of natural materials and these activities did not cause pollution to the Air and was without affecting the Environment. Even in sangam –literature it has been mentioned as,

***"Pazhayana kazhithalumPuthiyana puguthalum***
***Vazhuvala Kala Vagaiyinane"***

***Which means the old order change yielding place to new***

However, now the city dwellers have the habit of burning the tyres, tubes, plastic items like mat, wires etc., The bonfires lit by residents in the presence of high humidity and low temperature cause smog which causes various health hazards besides disrupting visibility and putting motorists in great hardship and over disturbance in flight operations during the early hours of the day.

As per the guidance of the Hon'ble Chief Minister of Tamilnadu, the Tamil Nadu Pollution Control Board has launched awareness campaign on 11.01.2022 through all the Print, Electronic and other Social medias in Greater Chennai City Corporation and also in all the District Head quarters of the state of Tamilnadu to propagate the ill effects of the burning of plastic and rubber materials.

In order to monitor the ambient air quality in Greater Chennai City Corporation limits, the TNPCB has conducted air quality survey for 24 hours on Pre-Bhogi (10.01.2022 to 11.01.2022) and on Bhogi day (12.01.2022 to 13.01.2022) in all the 15 zones of Greater Chennai City Corporation.

As per the orders of Tamil Nadu Government's Covid-19 mitigation directions, night curfew is imposed in the entire state of Tamil Nadu, from 06.01.2022 between 10.00 PM and 05.00 AM hence public movement was restricted. Due to the imposed curfew as well as the awareness campaign the public activity on Bhogi festival day was very skeletal and as a result the pollution level was very low when compared with previous year Bhogi (2021).

The Air Quality Index value for the various air quality categories are:

| AQI | Remark | Color Code | Possible Health Impacts |
|---|---|---|---|
| 0-50 | Good | | Minimal impact |
| 51-100 | Satisfactory | | Minor breathing discomfort to sensitive people |
| 101-200 | Moderate | | Breathing discomfort to the people with lungs, asthma and heart diseases |
| 201-300 | Poor | | Breathing discomfort to most people on prolonged exposure |
| 301-400 | Very Poor | | Respiratory illness on prolonged exposure |
| 401-500 | Severe | | Affects healthy people and seriously impacts those with existing diseases |

As per the report of Tamil Nadu Pollution Control Board Laboratory, the following findings were observed.

- The overall status of gaseous pollutant viz., Sulphur Dioxide ($SO_2$) and Nitrogen Dioxide ($NO_2$) at all 15 stations are found to be well within the prescribed standards of 80µg/m$^3$ on both Pre-Bhogi day and on Bhogi day.
- During the Bhogi day, the Particulate Matter ($PM_{2.5}$) level was in the range of 18-54 µg/m$^3$ as against the prescribed standard of 60 µg/m$^3$ and Particulate Matter ($PM_{10}$) was in the range of 45-91 µg/m$^3$ as against the prescribed standard of 100 µg/m$^3$.
- Based on the Air Quality Index, the minimum AQI value observed is 61 (AQI remarks - Satisfactory) at Teynampet and maximum AQI Value is 91 (AQI remarks – Satisfactory) at Madhavaram.

During the year 2021 on Bhogi day the AQI value out of the 15 zones of Greater Chennai City Corporation, 12 Zones were in moderate AQI value and the remaining 3 zones were in poor AQI value. Whereas in the current year (2022) all the 15

zones of Greater Chennai City Corporation the Air Quality Index are within satisfactory limit (AQI Value-51 to 100)

The Air Port Authorities has stated that there was no disruption in the flight operations on the day of Bhogi (13.01.2022). Further low humidity, moderate temperature and moderate wind speed ensured that the visibility was reasonably good.

Due to the effort of awareness programme by TNPCB, other Government Departments and NGOs the burning of waste materials like tyres, tubes, rubbers, plastics etc., have considerably reduced among the public and in turn this has helped in reduction of pollution level (AQI Values) when compared to previous year.

In this regard the Tamil Nadu Pollution Control Board thanks all the Government Departments, NGOs, Residential Welfare Associations, Press and Media and especially General public for their co-operation to celebrate the smoke less Bhogi.

Happy Pongal.....

**Sd/-**
**Chairman**

13.1.22
For Chairman

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

புகையில்லா போகி பண்டிகை – 2022

பத்திரிகை குறிப்பு

*"பழையன கழிதலும் புதியன புகுதலும்*
*வழுவல கால வகையினானே"*

*என பவனந்தி முனிவர் நன்னூலில் குறிப்பிட்டதைப்போல*

நமது முன்னோர்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கு முந்தைய நாளில் பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற அடிப்படையில் போகிப் பண்டிகையை கொண்டாடி வந்துள்ளனர். இயற்கையோடு இயைந்து, கிழிந்த பாய்கள், பழைய துணிகள், தேய்ந்த துடைப்பங்கள் மற்றும் தேவையற்ற விவசாய கழிவுகள் ஆகியவற்றைத் தீயிட்டு கொளுத்தி கொண்டாடுவது பண்டிகையின் மரபாகும்.

அதீத நகரமயமாதலினால் சென்னை போன்ற பெருநகரங்களில் தற்பொழுது போகிப்பண்டிகையின் போது டயர், டியூப், ரப்பர் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களையும் சேர்த்து எரிப்பதை வழக்கமாக கொண்டுள்ளனர். இதனால் ஏற்படும் புகை மற்றும் மாசினால், வயதானவர்கள் குழந்தைகள் மற்றும் நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மேலும், இத்தகைய மாசு, சுவாச நோய், இருமல், கண் எரிச்சல் மற்றும் நுரையீரல் கோளாறுகளை ஏற்படுத்துகிறது. மேலும் புகை மூட்டத்தினால் போக்குவரத்து தடைபடுவதுடன் விபத்துகளும், விமான போக்குவரத்தில் மாற்றங்களும் ஏற்படுகின்றன.

நவீன யுகத்தில் எல்லாப் பொருட்களையும் மறுசுழற்சி செய்து வருமானம் ஈட்டும் விஞ்ஞானம் வளர்ந்திருக்கும் இக்கால கட்டத்தில் போகி தினத்தன்று ரசாயன பொருட்களை எரித்து சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதை தவிர்த்து புகையில்லா போகியை கொண்டாடுவது நமது அனைவரது கடமையாகும்.

இதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கடந்த 19 ஆண்டுகளாக போகிப்பண்டிகைக்கு முன்பு பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், விழிப்புணர்வு பிரச்சாரத்தை தொடர்ந்து நடத்தி வருகின்றது. இதன் காரணமாக கடந்த வருடங்களில் பழைய ரப்பர் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் டயர், டியூப் போன்றவற்றை எரிப்பது வெகுவாக குறைந்துள்ளது.

அதன்படி நடப்பாண்டில் (2022) போகிப்பண்டிகையின் போது ஏற்படும் சுற்றுச்சூழல் மாசுபாட்டினை குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் சென்னை பெருநகர மாநகரம் மற்றும் அனைத்து மாவட்ட தலைமையிடங்களிலும் 11.01.2022 அன்று முதல் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் விழிப்புணர்வு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், சென்னை பெருநகர மாநகரத்தில் உள்ள 15 மண்டலங்களிலும் இரண்டு நாட்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு ஊடகங்கள், சமூக வலைதளங்கள் ஆகியவற்றின் மூலமாகவும் மற்றும் பிரச்சார வாகனங்களில் ஒலி பெருக்கி வாயிலாகவும்,

நடமாடும் காணொலி காட்சி வாகனத்தின் மூலமாக விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பிரச்சார ஊர்திகள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு செய்யப்பட்டுள்ளது.

போகிப்பண்டிகையின் போது சென்னை பெருநகர மாநகரத்தின் சுற்றுச்சூழல் காற்று தரத்தினை கண்காணிப்பு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரிய ஆய்வகத்தின் மூலம் போகிப்பண்டிகையின் முந்தைய நாள் *(10.01.2022–11.01.2022)* மற்றும் போகிப்பண்டிகை *(12.01.2022–13.01.2022)* அன்று *15* இடங்களில் *24* மணிநேரமும் காற்றுத்தரத்தினை கண்காணிக்க காற்று மாதிரி சேகரிப்பு செய்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் காற்றின் தர அளவுகளை வாரிய இணையதளத்தில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| AQI | Remark | Color Code | Possible Health Impacts |
|---|---|---|---|
| 0-50 | Good | | Minimal impact |
| 51-100 | Satisfactory | | Minor breathing discomfort to sensitive people |
| 101-200 | Moderate | | Breathing discomfort to the people with lungs, asthma and heart diseases |
| 201-300 | Poor | | Breathing discomfort to most people on prolonged exposure |
| 301-400 | Very Poor | | Respiratory illness on prolonged exposure |
| 401-500 | Severe | | Affects healthy people and seriously impacts those with existing diseases |

இந்த ஆய்வின்படி *12.01.2022* காலை *8.00* மணி முதல் *13.01.2022* காலை *8* மணி வரை சுற்றுச்சூழல் காற்று தரத்தினை அளவீடு செய்ததில், காற்றில் கலந்துள்ள கந்தக-டை-ஆக்சைடு, மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு ஆகிய வாயுக்களின் அளவு அனைத்து *15* மண்டலங்களிலும் அனுமதிக்கப்பட்ட தர அளவான *80* மைக்ரோகிராம்/கனமீட்டருக்கு உட்பட்டு இருந்தது.

- காற்றில் கலந்துள்ள *($PM_{2.5}$)* நுண்துகள்களின் அளவு குறைந்தபட்சமாக *18* மைக்ரோகிராம்/கனமீட்டர் முதல் அதிகபட்சமாக *54* மைக்ரோகிராம்/கனமீட்டர் வரை இருந்தது. *(நிர்ணயிக்கப்பட்ட $PM_{2.5}$ தர அளவு 60 மைக்ரோகிராம்/கனமீட்டர்).* மேலும், காற்றில் கலந்துள்ள *($PM_{10}$)* நுண்துகள்களின் அளவு குறைந்தபட்சமாக *45* மைக்ரோகிராம்/கனமீட்டர் முதல் *91* மைக்ரோகிராம்/கனமீட்டர் வரை இருந்தது. *(நிர்ணயிக்கப்பட்ட $PM_{10}$ தர அளவு 100 மைக்ரோகிராம்/கனமீட்டர்).*

- காற்று தர குறியீடு *(Air Quality Index)* பொருத்தமட்டில் குறைந்தபட்சமாக தேனாம்பேட்டையில் *61* ஆகவும் (திருப்திகரமாண அளவு) அதிகபட்சமாக மாதவாரத்தில் *91* ஆகவும் (திருப்திகரமாண அளவு) இருந்தது அறியப்பட்டது.

கடந்த ஆண்டு *(2021)* போகிப் பண்டிகையின் போது காற்றுத்தர குறியீட்டு அளவுகள் சென்னை பெருநகர மாநகராட்சியின் பதினைந்து மண்டலங்களில் *12* மண்டலங்களில் மிதமான அளவுகளிலும் மீதமுள்ள *3* மண்டலங்களில் மோசமான அளவுகளாக இருந்தது. நடப்பாண்டில் *(2022)* போகிப்பண்டிகையின் போது சென்னை பெருநகர மாநகராட்சியின் *15* மண்டலங்களிலும் காற்றுத் தர குறியீடு திருப்திகரமான அளவுகளிலேயே இருந்தது என்று கண்டறியப்பட்டது. *(காற்றுத்தர குறியீட்டு அளவு 51 முதல் 100 வரை).*

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னை விமான நிலையம், விமான நிலையத்தை சுற்றியுள்ள குடியிருப்பு பகுதி மக்களுக்கு குப்பைகளை எரிக்கவேண்டாம் என வேண்டுகோள் விடுத்ததின்பெயரில் பொது மக்கள் பெருமளவு குப்பைகளையோ அல்லது பிளாஸ்டிக் கழிவுகளையோ எரிக்கவில்லை எனவே விமான போக்குவரத்து தடைபடவில்லை. சென்னை மாநகரில் இன்று *(13.01.2022)* குறைந்த ஈரப்பதம், மிதமான வெப்பநிலை, மிதமான காற்றின் வேகம் காரணமாக புகை மண்டலம் அதிகமாக தென்படவில்லை. இதனால் தொலைதூர காணும் தன்மை *(Visibility)* நன்றாக இருந்ததால், விமான புறப்பாடு மற்றும் வருகை போக்குவரத்தில் எந்தவித இடையூறும் ஏற்படவில்லை என அறியப்பட்டது.

தமிழக அரசின் கொரோன கட்டுப்பாட்டு அறிக்கையின் படி தமிழகத்தில் கடந்த *06.01.2022* நாள் அன்று முதல் இரவு *10.00* மணி முதல் அதிகாலை *05.00* மணி வரை ஊரடங்கு அமலில் உள்ளது. இதனால் பொது மக்கள் அதிக அளவு வெளியில் வராத காரணத்தால் போகிப்பண்டிகையின் போது மாசின் அளவு கடந்த ஆண்டை *(2021)* விட நடப்பாண்டு *(2022)* வாரியத்தின் ஆய்வின்படி காற்று தர குறியீடு மாசின் அளவு *(Air Quality Index)* மிகவும் குறைந்து காணப்பட்டுள்ளது.

இந்தளவு மாசு அளவு குறைந்ததற்கு பொதுமக்களிடையே இருந்த விழிப்புணர்வும், டயர், டியூப், ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை எரிக்காமல் ஒத்துழைப்பு தந்ததும் முக்கிய காரணமாகும். இதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அரசு துறையினருக்கும், அரசுசாரா அமைப்பினருக்கும், குடியிருப்போர் நலச்சங்கங்களுக்கும், செய்தி மற்றும் ஊடகங்களுக்கும் குறிப்பாக பொதுமக்களுக்கும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

**// இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்//**

13/1/22

வாரிய தலைவருக்காக

**TAMILNADU POLLUTION CONTROL BOARD**

Ambient Air Quality in Greater Chennai Corporation during Pre Bhogi & Bhogi 2022

| Zone. No | Name of the Zone | Station Location | Pollutants concentration in µg/m³ (24 hrs average) 8.00 am to 8.00 am | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | $SO_2$ | | $NO_2$ | | $PM_{10}$ | | $PM_{2.5}$ | | Pre-Bhogi | | Bhogi | |
| | | | Pre Bhogi 10.01.2022 to 11.01.2022 | Bhogi 12.01.2022 to 13.01.2022 | Pre Bhogi 10.01.2022 to 11.01.2022 | Bhogi 12.01.2022 to 13.01.2022 | Pre Bhogi 10.01.2022 to 11.01.2022 | Bhogi 12.01.2022 to 13.01.2022 | Pre Bhogi 10.01.2022 to 11.01.2022 | Bhogi 12.01.2022 to 13.01.2022 | AQI Value | AQI Remarks | AQI Value | AQI Remarks |
| I | Thiruvotriyur | Kathivakkam | 12 | 14 | 13 | 16 | 41 | 71 | 24 | 41 | 41 | Good | 71 | Satisfactory |
| II | Manali | Manali | 13 | 14 | 14 | 16 | 42 | 88 | 26 | 54 | 43 | Good | 89 | Satisfactory |
| III | Madhavaram | Thillai Nagar | 12 | 12 | 15 | 14 | 46 | 91 | 28 | 52 | 47 | Good | 91 | Satisfactory |
| IV | Tondiarpet | Tondiarpet | 11 | 13 | 19 | 22 | 53 | 79 | 30 | 45 | 53 | Satisfactory | 79 | Satisfactory |
| V | Royapuram | Royapuram | 12 | 14 | 16 | 17 | 55 | 66 | 25 | 39 | 55 | Satisfactory | 66 | Satisfactory |
| VI | Thiru.Vi.Ka. Nagar | Thiru.Vi.Ka. Nagar | 13 | 16 | 14 | 18 | 43 | 82 | 26 | 49 | 44 | Good | 82 | Satisfactory |
| VII | Ambattur | Ambattur | 13 | 12 | 14 | 14 | 43 | 75 | 26 | 41 | 43 | Good | 75 | Satisfactory |
| VIII | Anna Nagar | Anna Nagar | 9 | 11 | 18 | 20 | 46 | 71 | 23 | 28 | 46 | Good | 71 | Satisfactory |
| IX | Teynampet | T. Nagar | 7 | 11 | 21 | 22 | 48 | 61 | 19 | 21 | 48 | Good | 61 | Satisfactory |
| X | Kodambakkm | Kodambakkm | 8 | 10 | 15 | 18 | 41 | 68 | 22 | 27 | 41 | Good | 68 | Satisfactory |
| XI | Valasaravakkam | Zonal office | 9 | 14 | 23 | 24 | 48 | 60 | 24 | 42 | 47 | Good | 70 | Satisfactory |
| XII | Alandur | Zonal office, | 6 | 12 | 22 | 21 | 46 | 45 | 21 | 39 | 46 | Good | 65 | Satisfactory |
| XII | Adyar | Besant Nagar | 7 | 9 | 20 | 17 | 33 | 67 | 19 | 35 | 33 | Good | 67 | Satisfactory |
| XIV | Perungudi | Perungudi | 9 | 11 | 18 | 21 | 47 | 90 | 14 | 23 | 49 | Good | 90 | Satisfactory |
| XV | Shozhinganallur | Shozhinganallur | 8 | 12 | 16 | 22 | 49 | 81 | 15 | 18 | 47 | Good | 81 | Satisfactory |
| Standards values for 24hrs | | | 80 | | 80 | | 100 | | 60 | | | | | |

| Note : | 0-50 - Good | 51-100-Satisfactory | 101-200-Moderately |
|---|---|---|---|
| | 201-300 - Poor | 301-400 - Very Poor | 401-500- Severe |

Note: IF - Instrument Failure

13/1/2022
Dy.CSO

13/1/22
Assistant Director (Lab)
AEL, TNPCB, Chennai-32